பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி-சென்னை - 4
04 01 2026 SUNDAY 7 15 AM
ஆகாஷ்வாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதே மத்திய அரசின் நோக்கம் என்று மத்திய அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.

2. மத்திய மாநில அரசுகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு இடையே ஒருங்கிணைந்த செயல்பாடுகள் அவசியம் என்று மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

3. மொரீசியஸ் அதிபர் திரு. Dharmbeer Gokhool, ஐந்து நாள் பயணமாக இந்தியா வந்துள்ளார்.

4. வெனிசுலாவில் அமெரிக்கா மேற்கொண்ட ராணுவ நடவடிக்கை ஆபத்தானது என்று ஐ.நா பொதுச்செயலாளர் திரு. ஆண்டனியோ குட்டரஸ் தெரிவித்துள்ளார்.

5. ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் தமிழக அணி 4-2 என்ற கோல்கணக்கில் ஹைதராபாத் அணியை வென்றது.

>>>>>><<<<<<

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதே மத்திய அரசின் நோக்கம் என்று மத்திய ரசாயனம் மற்றும் உரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், உர உற்பத்தியில் இந்த ஆண்டு நாடு சாதனை படைக்கும் என்று தெரிவித்தார்.

உரங்களை சீரான முறையில் பயன்படுத்துதல், மற்றும் விவசாயமல்லாத பிற நோக்கங்களுக்காக உரங்கள் தவறாக

பயன்படுத்தப்படுவதை தடுக்க அரசு தீவிரமாக செயல்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

>>>>>><<<<<<

மத்திய மாநில அரசுகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு இடையே ஒருங்கிணைந்த செயல்பாடுகள், மும்பையில் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு அவசியம் என்று மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

மும்பையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இந்நகரின் வளர்ச்சிக்கு பிஜேபி தலைமையிலான மஹாயுக்தி கூட்டணி அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் பயனளிக்கத் தொடங்கியுள்ளதாக கூறினார்.

கடந்த ஆண்டு சீர்திருத்தங்களின் ஆண்டு என்று குறிப்பிட்ட அவர், வருமான வரிச் சலுகை, சரக்கு மற்றும் சேவை வரியில் சீர்திருத்தம், பிரிட்டன், ஓமன், நியூஸிலாந்து ஆகிய நாடுகளுடன் மேற்கொள்ளப்பட்ட வர்த்தக உடன்படிக்கைகள் மூலம் வர்த்தகமும் வேலைவாய்ப்பும் அதிகரிக்கும் என்று கூறினார்.

அடல் பாலத் திட்டம், கடலோர சாலை, மெட்ரோ விரிவாக்கத் திட்டம், நவிமும்பை சர்வதேச விமான நிலையம், தாராவி குடிசைப்பகுதி மறுசீரமைப்பு திட்டம் ஆகியவை மும்பை மாநகரின் முகத் தோற்றத்தை மாற்றும் என்று அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார்.

>>>>>><<<<<<

மொரீசியஸ் அதிபர் திரு. *Dharmbeer Gokhool*, ஐந்து நாள் பயணமாக இந்தியா வந்துள்ளார்.

ஆந்திரப்பிரதேச மாநிலம் கண்ணவரம் விமான நிலையத்திற்கு வந்த அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

அம்மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. கண்டுலா துர்கேஷ் மற்றும் உயரதிகாரிகள் அவரை வரவேற்றனர்.

பின்னர் குண்டூர் புறப்பட்டுச் சென்ற மொரீசியஸ் அதிபர் அங்கு நடைபெறவுள்ள 3-வது உலக தெலுங்கு மாநாட்டில் பங்கேற்று உரையாற்றுகிறார்.

>>>>>><<<<<<

நாட்டின் செழுமையான கலாச்சாரம் மற்றும் மரபுகளை மாணவர்கள் அறிந்துகொள்ள, குடியரசுத் தின முகாம் தேசிய மாணவர் படையினருக்கு ஒரு தளமாக அமைந்துள்ளது என்று அப்படையின் தலைமை இயக்குநர் லெப்டினன்ட் ஜெனரல் Virendra Vats கூறியுள்ளார்.

தில்லியில் நேற்று தொடங்கிய இந்த ஆண்டுக்கான முகாமில், பேசிய அவர் நாடு முழுவதும் 90 சதவீதத்திற்கும் மேற்பட்ட மாவட்டங்களில் என்சிசி பிரிவுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று குறிப்பிடார்.

என்சிசி மாணவர்களின் எண்ணிக்கை 1948-ல் தொடங்கப்பட்டபோது 20,000 ஆக இருந்தது என்றும் தற்போது கிட்டத்தட்ட 20 லட்சமாக அதிகரித்துள்ளது என்றும் இதில் 40 சதவீதத்தினர் பெண்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

பல்வேறு முகாம்கள் மூலம் இளைஞர்களிடையே ஒழுக்கம் மற்றும் நற்பண்புகளை வளர்ப்பதில் என்சிசி முக்கிய பங்கு வகிப்பதாகவும் லெப்டினன்ட் ஜெனரல் Virendra Vats கூறினார்.

>>>>>><<<<<<

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார சட்டத்திற்கு நாடுமுழுவதும் கிராமப்புறங்களில் விவசாயத் தொழிலாளர்கள் மத்தியில் வரவேற்பு அதிகரித்துள்ளது.

தமிழகத்தின் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள விவசாய தொழிலாளர்கள், இந்த சட்டம் தங்களுக்கு வேலைவாய்ப்பை உறுதிப்படுத்தியுள்ளதாக தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - பயனாளிகள் 50 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

வெனிசுலாவில் அமெரிக்கா மேற்கொண்ட ராணுவ நடவடிக்கை ஆபத்தானது என்று ஐ.நா பொதுச்செயலாளர் திரு. ஆண்டனியோ குட்டரஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஐ.நா செய்தி தொடர்பாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இறையாண்மை மிக்க ஒரு நாட்டின் அதிபரை அமெரிக்கா கைது செய்த நடவடிக்கை ஆபத்தான முன்னுதாரணம் என்று பொதுச்செயலாளர் கூறியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை, *தென்அமெரிக்காவில்* கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

சர்வதேச சட்ட விதிமுறைகள் மீறப்பட்டுள்ளது குறித்து, ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ள ஐ.நா. பொதுச்செயலாளர், ஐ.நா. சாசனம் உள்ளிட்ட சர்வதேச சட்டங்களை முழுமையாக அனைத்து நாடுகளும் மதிக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

வெனிசுலாவில் மனித உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சியை மதிக்கும் வகையில் அனைவரையும் உள்ளடக்கிய பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்நிலையில், வெனிசுலாவில் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து விவாதிக்க, ஐ.நா. பாதுகாப்பு சபை நாளை அவசரமாக கூடுகிறது.

பாதுகாப்பு சபையில் தற்காலிக உறுப்பினராக கொலம்பிய விடுத்த கோரிக்கை அடிப்படையில் இந்தக் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கொலம்பியாவின் கோரிக்கைக்கு பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்பு நாடுகளான ரஷ்யா, சீனா ஆதரவு தெரிவித்துள்ளன.

*வெனிசுலாவில் அமெரிக்கா மேற்கொண்ட நடவடிக்கைக்கு, ஐ.நாவுக்கான வெனிசுலாவின் நிரந்தர தூதரகம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.*

அமெரிக்க ராணுவ நடவடிக்கையை கடுமையாக விமர்சித்து பாதுகாப்பு சபைக்கு அது கடிதம் அனுப்பியுள்ளது.

ஆயுத மோதலை விட அமைதி, சர்வதேச சட்டத்தை மதித்து நடத்தல் மற்றும் மனித கண்ணியத்தை பாதுகாத்தல் ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்று கொலம்பிய அதிபர் திரு. Kustao Petro தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

வெனிசுலாவில் தற்போதுள்ள சூழலை கருத்தில் கொண்டு, இந்தியர்கள் அந்நாட்டிற்கு அவசியமற்ற பயணங்கள் மேற்கொள்வதை தவிர்க்குமாறு வெளியுறவு அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது.

இதுகுறித்து அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், வெனிசுலாவில் தற்போது இருக்கும் இந்தியர்கள் அனைவரும் எச்சரிக்கையுடனும், பாதுகாப்புடனும் இருக்குமாறு அறிவிறுத்தப்பட்டுள்ளது.

வெளியில் நடமாடுவதை குறைத்துக் கொள்ளவும், தலைநகர் Caracas-ல் உள்ள இந்திய தூதரகத்துடன் தொடர்பில் இருக்கவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

உதவிகள் தேவைப்படுவோர் cons.caracas@mea.gov.in மற்றும் 58-412 – 958428 என்ற தொலைபேசி எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம் என்று வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது.

>>>>>><<<<<<

மணிப்பூர் மாநிலத்தில் காவல்துறையினர் மற்றும் பாதுகாப்புப் படையினர் நேற்று நடத்திய தேடுதல் வேட்டையில், பெருமளவிலான ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

இம்பால் கிழக்கு மாவட்டத்தில் உள்ள Lamlai Telou பகுதியில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ரகசிய தகவலின் அடிப்படையில் நடத்தப்பட்ட இந்த சோதனையின் போது, இரண்டு கைத்துப்பாக்கிகள், 91 சுற்று தோட்டாக்கள் மற்றும் வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டதாக அம்மாநில காவல்துறை தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

*தில்லி, ஹரியானா, பஞ்சாப், உத்தரபிரதேசம், பீகார் மாநிலங்களில் இன்று அடர்த்தியான பனிமூட்டம் காணப்படும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.*

*ஹிமாச்சலப்பிரதேசம், உத்ராகண்ட் மாநிலங்கள் மற்றும் ஜம்மு கஷ்மீர், லடாக்கில் மூடுபனி நிலவும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இதனிடையே, தலைநகர் தில்லி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் நிலவும் கடும் மூடுபனி காரணமாக, நேற்று 72 விமானங்களின் சேவை ரத்து செய்யப்பட்டன.*

*>>>>>><<<<<<*

*ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் தமிழக அணி 4-2 என்ற கோல்கணக்கில் ஹைதராபாத் அணியை வென்றது.*

*சென்னையில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் இரு அணிகளும் தலா 3 கோல் போட்டு சமநிலையில் இருந்ததால், ஆட்டத்தின் வெற்றி தோல்வியை தீர்மானிக்க, பெனால்டி முறை கடைபிடிக்கப்பட்டது. இதில் தமிழக அணி 4 கோலும், ஹைதராபாத் அணி 2 கோலும் அடித்தன.*

*இன்று மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில், சூர்மா அணி பெங்கால் அணியை எதிர்கொள்கிறது.*

*இரவு 7.30-மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் கலிங்கா அணி – ராஞ்சி அணியை எதிர்கொள்ளவுள்ளது.*

*ராஞ்சியில் நேற்று நடைபெற்ற மகளிர் பிரிவு ஆட்டத்தில், SG Pipers அணி 3-1 என்ற கோல்கணக்கில் சூர்மா அணியை வென்றது.*

இன்று மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் ராஞ்சி அணி பெங்கால் அணியை எதிர்கொள்கிறது.

>>>>>><<<<<<

தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான முதலாவது இளையோர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 25 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

Benoni-யில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் விளையாடிய இந்தியா. நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 301 ரன் எடுத்தது.

302 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய தென்னாப்பிரிக்க அணி, 27 புள்ளி நான்கு ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 148 ரன் எடுத்திருந்த நிலையில், மழை குறுக்கிட்டதால், ஆட்டத்தை தொடர முடியவில்லை.

இதனால், டக் வொர்த் லிவிஸ் முறையில் இந்தியா வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

>>>>>><<<<<<

சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியின் மகளிர் பிரிவில் சின்ட்ரல்லா தாஸூம், ஆடவர் பிரிவில் ரூபம் சர்தாரும் பட்டம் வென்றனர்.

வடோதராவில் நேற்று நடைபெற்ற மகளிர் பிரிவு இறுதியாட்டத்தில் சின்ட்ரல்லா தாஸ் 11-3, 9-11, 11-9, 11-9 என்ற செட்கணக்கில் ஹன்சினி மதனை வென்றார்.

ஆடவர் பிரிவில் ரூபம் சர்தார் 11-8, 6-11, 11-5, 11-3 என்ற செட்கணக்கில் சோகம் முகர்ஜியை வென்றார்.

>>>>>><<<<<<

*72வது தேசிய வாலிபால் போட்டிகளை பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று காணொலி வாயிலாக தொடங்கி வைக்கிறார்.*

*வாரணாசியில் இம்மாதம் 11ஆம் தேதிவரை இப்போட்டிகள் நடைபெறவுள்ளது.*

*ஆடவர் மகளிர் பிரிவில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் 73 அணிகள் பங்கேற்கின்றன.*

*>>>>>>END<<<<<<*